UTL MEDIA

# உள்ளாட்சித்தகவல்

www.ullatchithagaval.com

பெறுநர்: நாள்: 06.11.2023

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள்,**
**தமிழ்நாடு முதலமைச்சர்,**
தலைமைச் செயலகம்,
புனித ஜார்ஜ் கோட்டை,
சென்னை -600009.

**தீபாவளி பண்டிகையை முன்னிட்டு கலைஞர் மகளிர் உரிமைத் தொகையை முன்கூட்டியே வழங்க உத்தரவிட வேண்டும்.**

சிறப்புடையீர் வணக்கம்.

தமிழ்நாட்டில் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளில் தொடங்கப்பட்டு கடந்த இரண்டு மாதங்களாக ஒவ்வொரு மாதமும் 15 ஆம் தேதி தேர்ந்தெடுக்கப்பட்ட பயனாளிகளின் வங்கி கணக்கில் அரசின் சார்பில் செலுத்தப்பட்டது.

இந்நிலையில் 12.11.2023 அன்று தீபாவளி பண்டிகை வருகிறது. தீபாவளி பண்டிகையை விமர்சையாக கொண்டாடுவதற்கு அரசு ஊழியர்கள் மற்றும் அதிகாரிகளுக்கு அந்தந்த துறையின் சார்பில் ஆண்டுதோறும் முன்கூட்டியே போனஸ் வழங்கப்படுகிறது. தனியார் நிறுவனங்களின் சார்பிலும் தீபாவளி போனஸ் வழங்கப்படுகிறது. ஆனால், ஏழை மக்களின் நிலை மிகவும் பரிதாபமாகத்தான் உள்ளது.

தீபாவளி பண்டிகையை எளிமையாகக் கொண்டாடுவதற்கு ஏழை, எளிய மற்றும் நடுதர மக்கள் கடன் வாங்கிதான் தங்களது குழந்தைகளுக்கு புத்தாடைகள், பட்டாசு மற்றும் பலகாரங்கள் வாங்கிக் கொடுக்கிறார்கள்.

கடன் வாங்கவே முடியாத ஏழை ஜனங்கள் அந்தந்த பகுதியில் உள்ள செல்வந்தர்களின் வீடுகளில் இனாமாக கொடுக்கும் தின்பண்டங்களைதான் தங்களது குழந்தைகளுக்கு வாங்கி வந்து கொடுக்கிறார்கள். இதுதான் உண்மையான கள நிலவரம். இப்படி தான் காலம் காலமாக நடைபெற்றும் வருகிறது.

தீபாவளி பண்டிகை என்பது ஜாதி, மத, பேதமில்லாமல் அனைத்து தரப்பு மக்களாலும் கொண்டாடப்படும் ஒரு பொதுப் பண்டிகையாக நீண்ட காலமாக இருந்து வருகிறது.

எனவே, அந்த வகையில் மாதந்தோறும் 15 ஆம் தேதி வழங்கப்படும் மகளிர் உரிமைத் தொகையை, இந்த தீபாவளி பண்டிகையை முன்னிட்டு இந்த மாதம் மட்டும் 10.11.2023 அன்றே பயனாளிகளின் வங்கி கணக்கில் செலுத்தினால் ஏழை, எளிய மற்றும் நடுதர மக்கள் சிறிதளவேனும் மகிழ்ச்சி அடைவார்கள்.

எனவே, தமிழ்நாடு முதலமைச்சர் ஆகிய தாங்கள், இதை அவசரக் கோரிக்கையாக ஏற்று அதற்கான உத்தரவை அதிகாரிகளுக்கு வழங்குமாறு இதன் மூலம் கேட்டுக்கொள்கிறேன்.



Dr.துரைபெஞ்சமின், BAMS., M.A.,SOCIOLOGY,
Ex. Honorary A.W.Officer, Govt Of India,
Editor & Publisher,

# www.ullatchithagaval.com

Director, UTL MEDIA OPC PVT LTD,
editorutlmedia@gmail.com
Mobile No.98424 14040
No.4,Trichy – Dindigul Main Road,
Pon Nagar, Trichy-620001.
Tamil Nadu.